# இந்து சமுதாய வரலாற்றில் பெண்கல்வி : ஓர் ஆய்வு

அ.வியாசன்

விடுகை வருடமாணவன்
இந்துநாகரிகத்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.
viyasan95@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்த நாட்டின் கல்வி தரத்தில் தங்கியுள்ளது. கீழைத்தேய, மேலைத்தேயச் சிந்தனையாளர்கள் ஒரு பெண்ணுக்கு வழங்கப்படுகின்ற கல்வி குடும்ப அங்கத்தவர்கள் பலருக்கு பயனளிப்பதாக கருதுகின்றனர். இந்து சமுதாய வரலாற்றில் பெண்கல்வி ஓர் ஆய்வு என்ற தலைப்பில் அமைந்துள்ள இவ்வாய்வானது, இந்து சமூகத்தில் பெண்களின் கல்வி வளர்ச்சி மற்றும் பெண்கள் எதிர் கொண்ட சவால்களை வெளிக்கொணர்தல் என்பதை ஆய்வின் நோக்காகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இந்து மரபிலே பெண்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிக்கப்பட்டதா? தீர்வாக இருக்குமென எதிர்ப்பார்த்த கருத்துக்கள் எவை குடும்ப மட்டத்திலும் சமூக மட்டத்திலும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு எடுக்கப்பட்ட தீர்வுகள் எவை? பெண்ணின் பிரச்சினைகளுக்கு கல்வியறிவின் வளர்ச்சி தீர்வாக அமையுமென சிந்திக்கப்பட்டதா? ஆணிற்கு சமமாகப் பெண்ணை உயர்த்துவதற்கு கல்வியறிவு உதவியாக அமையலாம் என்ற கருத்துக்கள் நிலவியதா போன்ற ஐயங்களுக்கு விடை காண வேண்டியுள்ளது போன்றன ஆய்வுப்பிரச்சினையாக காணப்படுகின்றது. இவ்வாய்வானது, விவரண ஆய்வாக அமைகிறது. பொருத்தமான சந்தர்ப்பத்தில் பகுப்பாய்வு, ஒப்பீட்டாய்வு மற்றும் வரலாற்று ஆய்வுமுறையியல்களூடாக நிகழ்த்தப்பட்டுள்ளது. இவ்வாய்வானது வேதகாலம் தொடக்கம் இருபதாம் நூற்றாண்டுவரை கொண்டுள்ளது. இந்து சமுதாய வரலாற்றில் பெண்கல்வி வேதகாலத்தில் பெண்கல்வி, உபநிடதகாலத்தில் பெண்கல்வி, இராமாயண காலத்தில் பெண்கல்வி, சங்ககாலத்தில் பெண்கல்வி, சங்கமருவிய கால பெண்கல்வி, பல்லவர் காலத்தில் பெண்கல்வி, சோழர் காலத்தில் பெண்கல்வி, விஜயநாயக்கர் காலத்தில் பெண்கல்வி, நவீன சீர்திருத்தவாதிகளின் பெண்கல்வி பற்றிய சிந்தனை, இலங்கையில் பெண்கல்வி போன்றன இவ்வாய்வு நிலைநிறுத்துகின்றது. பெண்கள் தொடர்பான பாரம்பாரிய ஆய்வுகள் கல்வி மற்றும் சமூகசேவை, குடும்பச்சிறப்பு என்ற வகையிலே முன்னெடுக்கப்படுதல் பாரம்பரிய பெண்களின் சிறப்புக்களை மேலும் அறிய உதவும். பெண்கள் தொடர்பான ஆய்வுகள் பல்வேறு துறைகள் ஊடாக பல கோணங்கள்களில் ஆய்வுகள் மேற்கொள்ளவேண்டும். பண்டைய பெண்களின் இந்து சமுதாயத்தில் பல்வேறுபட்ட விதங்களில் விதிக்கப்பட்ட கட்டுக்கோப்புகளுக்கு உட்பட்ட வகையில் வாழ்ந்து சிறப்பித்தனர் என்பதை எமது இன்றைய மற்றும் அடுத்த தலைமுறையினருக்கும் எடுத்துக்காட்டுவதற்கு இத்தைய ஆய்வுத்தேடல்களும் அவற்றின் வெளிப்பாடுகள் உதவியவாக இவ்வாய்வு அமையும் எனலாம்.

திறவுச்சொற்கள் - இந்து சமுதாயம், பெண்கல்வி, வேத இலக்கியங்கள்.

**அறிமுகம்**

பெண்களின் பிறப்புரிமைகளைப் பாதுகாக்கும் நாடே நாகரிகமும் பண்பாடு மிக்க நாடாகும். ஒரு நாட்டின் நாகரிகம் அந்த நாட்டின் பெண் மக்கள் நிலையைப் பொறுத்து நிற்கிறதென்பது எவரும் ஏற்கத்தக்க உண்மை. ''பெண்மக்கள் எவ்விதக் கட்டுபாடுமின்றி, இருக்கணுமின்றிப் பிறப்புரிமை இன்பத்தை எங்கே நுகர்கிறார்களோ, அங்கேயுள்ள ஆண்மக்கள் நாகரிக நுட்பமுணர்ந்தவர்களாகிறார்கள் அந்நாடே நாகரிகம் பெற்றாதகும்.''[1] என்ற கருத்து நினைத்தற்குரியது. இந்துப் பண்பாடு மனிதனை மனிதனாக வாழவைப்பதில் பெரும் பங்கு கொண்டுள்ளது. இப்பண்பாட்டைப் பெறுத்தவரையில் பெறப்படுகின்ற பல நல்லியல்புகள் தனிமனிதனை மாத்திரமன்றி உலகையும் வாழவைக்கிறது. தனிமனிதன் சமூகத்திற்குத் தருவதும் சமூகம் தனி மனிதனுக்கு உணர்த்துவதும் பண்பாட்டின் பாற்படுவன. இந்து சமுதாயத்தை பொறுத்தவரையில் அறிவு, நம்பிக்கை, ஒழுக்கம், பழக்கவழக்கம் போன்ற பல அம்சங்களை உடைய ஒருங்கிணைப்பைக் காணமுடிகின்றது. இந்து சமுதாய வரலாற்றில் பெண்கல்வி பற்றி ஆராய்வதற்கு வடமொழி மற்றும் தமிழ் இலக்கியங்கள் பெருமளவில் உதவுகின்றன. இலக்கியங்கள் ஒரு சமூகத்தின் கண்ணாடியாக விளங்கும் காரணத்தால் அவை தரும் கருத்துக்களில் பெண்கல்வி பற்றிய ஒரு பரிமாணம் பிரதிபலிக்கப்படுகின்றமை இங்கு குறிப்பிட்டதக்கதாகும்.

**வேதகாலத்தில் பெண்கல்வி**

வேதகாலத்தில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக மதிக்கப்பட்டனர். அவர்களுக்குக் கல்வி பெறும் வாய்ப்பும் சுதந்திரமும் இருந்தன. பிரமச்சாரியம் என்ற கல்விக்காலம் ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கு இருந்தது. உயர்கல்வி கற்றுத் தேறி, ஆண்களுடன் ஆன்ம தத்துவ விசாரணை மற்றும் கருத்தரங்குகள் விவாதங்கள் என்பவனவற்றில் ஈடுபாடு கொண்ட பெண்கள் இருக்கின்றனர். வேதப்பாக்கள் ஒரு சிலவற்றையாயினும் இயற்றிய பெருமையும் பெண்களைச் சார்ந்துள்ளது. இருக்கு வேதத்தில் இருபத்தேழு பெண் இருடிகள் இயற்றிய பாடல்கள் உள்ளன.[2] இவையாவும் இந்து மரபுக் கல்வியிலும் கலைகளிலும் கலாசாரங்களிலும், வேதகாலப் பெண்கள அடைந்துள்ள முன்னேற்றத்தைக் காட்டும் சான்றுகளாக விளங்குகின்றன. பெண்களுக்கு மதிப்பும் மாண்பு அளிக்கப்பட்டிருந்தனவென்று தெரியவருவதோடு இவற்றினுல் இந்துமரபும் பண்பாடும் உன்னத நிலையிலும் இருந்ததென்பதும் அறியவருகிறது. என்பதற்கு இருக்குவேதத்திலும் யசுர்வேதத்திலும் சான்றுகள் உள்ளன.[3]

''கல்வியும் இளமையும் நிறைந்த மணமாகாத தனது மகளை கல்வியறிவு நிரம்பப்பெற்ற ஒருவனுக்கு மணம் முடித்து வைக்க வேண்டியது தந்தையின் கடமை'' (iii.5,65,16)

''பிரமச்சரியம் எனும் மானவப்பருவம் நிறைவு பெற்ற பின்னரேதான் தனது மகளை மணம் முடித்துக் கொடுத்தல் தந்தையின் கடமை'' (viii.1.)

எல்லா வகையிலும் நிறைவும், பொருத்தமுள்ள ஆண்மகனைத் தெரிந்து மணப்பதற்குப் பெண்ணுக்கு உரிமை இருந்தது. புனித மந்திரங்களை ஓதுவதற்கு யாகங்களில் கணவனுடன்


ISBN 978-624-5736-14-0

பங்கு கொள்ளுவதற்கு உரிமை மறுப்பு என்பன வேதகாலத்தில் இருக்கவில்லை. கோசா, உலோப முத்திரை, மமதா, யாமி, விஸ்வவாரா போன்ற வேதகால மகளிர் கல்வி, வேள்வி, அறிவுகளிற் சிறந்த இருடிகளாக விளங்கினர் என்று இருக்குவேதம் கூறுகிறது. முட்காவி என்ற பெண் போர் முறைகளில் தேர்ச்சி பெற்றுள்ளதாகக் குறிப்பிட்ப்பட்டுள்ளது. விழாக்களிலும் போட்டிகளிலும் ஆண்களும், பெண்களும் உற்காசமாகப் பங்கு பற்றியதாக இருக்கு வேதம் கூறுகிறது. இவ்விழாக்களைச் சமனக்கள் எனக் குறிப்பிட்டனர். பெண்களும் ஆண்களும் தத்தம் வாழ்க்கைத் தலைவர்களை இத்தகைய சமனக்களில் தாமே தெரிவு செய்யும் வழக்கம் இருந்தது மகளின் விருப்பத்திற்கு இடையூறாகப் பெற்றோர் இருப்பதில்லை பெண்களுக்குச் சொத்துரிமையும் இருந்தது.[5] மேலே குறிப்பிட்ட கருத்துக்களை நோக்கும் போது வேதகாலத்தில் பெண்களுக்கு எதிராக எவ்வித பாகுபாடும் இருந்திருக்கவில்லை என்பது புலனாகின்றது. பெண்களின் கல்வி நிலையும் சீராகவும் நடைமுறையிலும் அமைந்து இருந்தமையே இச்செய்திகள் காட்டுகின்றன. பெண்களின் நிலை சிறந்து இருந்தமைக்குக் கல்வியே காரணமாக அமைகின்றது.

**உபநிடத காலத்தில் பெண்கல்வி**

உபநிடத காலத்தில் பெண்களின் கல்வி அஸ்தஸ்து உயர்நிலையில் இருந்தது. அரச சபைகளில் புலன் கடந்த விடயங்கள் தொடர்பான வினாக்கள் மீதான கலந்துரையாடல்கள் மற்றும் புலனுக் கெட்டா உலகின் உண்மை பற்றிய விடயங்களில் பெண்கள் உயரிய பங்கு வகித்தினர் இவற்றிக்கான சான்றுகள் உபநிடதங்களில் காணப்படுகின்றன. இக்காலப்பகுதிகளில் இருவகைப்பட்ட பெண்களைக் காணலாம். திருமணம் வரை கல்வி வேள்விகளில் ஈடுபட்டு விளங்கியவர்கள் ‘‘ஸ்த்யோத்வாஹாக்கள்’’ எனவும் திருமணம் செய்து கொள்ளாது உயர் வாழ்க்கைக்கென்று தம்மை அர்ப்பணித்துக் கல்வி வேள்விகளில் ஈடுபட்டோர் ‘‘பிரம்மவாதினிகள்’’ எனப்பட்டனர் இவர்கள் இலட்சியப் பெண்களாகத் மைத்ரேயி திகழ்கின்றனர்.[6]

பிராஜாபதி பெண்ணைப் படைத்து உபசரித்தார் எனவே, யாவரும் அவளை உபசரிக்க வேண்டும் எனப் பிருஹதாரண்ய உபநிடதம் கூறுகின்றது. மேலும் இக்காலத்துச் சமூகத்தில் படித்த பெண் விரும்பப்பட்டாள் யாக்ஞவல்லியருடைய மனைவியான மைத்திரேயி என்பவரும், வாசக்னு என்ற தபசியின் மகளாகி கார்கியும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. அவர்கள் உண்மைப் பொருளை அறிவதற்கு நாட்டம் கொண்டிருந்தமை பற்றிக் கூறப்படுகிறது. யாக்ஞவல்லியர் அவருடைய காலத்தில் சிறந்த கலைஞானம் மிக்கவராக விளங்கியதுடன் உலக வாழ்க்கையைப் புறக்கணித்துத் தனது இரு மனைவியராகிய மைத்ரேயி, காத்யாயனி ஆகியோரிடையில் தனது செல்வங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்பினார். இதை அறிந்து அவரின் மனைவி மைத்ரேயி நிறைந்த வளங்களை உடைய இப் பூமியானது முழுமையாக எனக்குச் சொந்தமானால் அதன் மூலம் நான் இறவாமையை அடைந்துவிட முடியுமா? என வினாவினார். அதற்கு யாக்ஞவல்லியர் இல்லை, செல்வந்தர்களின் வாழ்க்கை போன்றே உனது வாழ்க்கையும் அமையும் என்று பதிலளிக்கவே மீண்டும் மைத்ரேயி இறவாமையை அளிக்காத இச்செல்வதைக் கொண்டு நான் எதைச் சாதிக்க முடியும்? அது பற்றி எனக்குக் கூறுங்கள் என்றாள். யாக்ஞவல்லியரும் இறவாமைக்கு மார்க்கமான பிரம்மம் பற்றிய அறிவை

மைத்ரேயிக்கு கூறினார்.''[7] மைத்ரேயி ஆசிரியராயிருந்து ஒரு வேதப்பாடசாலையை நடத்தினார் எனவும் கூறப்படுகின்றது.

இக்காலத்தில் சிறந்த மற்றொரு பெண் கார்கி. இவர் சிறந்த ஒரு கல்விமானாக விளங்கினார். யாக்ஞவல்லியரிடம் இருப்பின் மூலம் பற்றி நீண்ட விளக்கத்தை வினவினார். மேலும், கார்கி யாஞ்யவல்லியருடன் வாதம் புரிந்து ''தர்க்க அரசி'' எனும் பெயரைப் பெற்றார். தேவபூபதி என்பவர் கபிலரைப் பெற்ற தாயாராவர் அவரிடம் கபிலர் கல்வி பயின்று அப்பயிற்சியின் பயனாகச் சாங்கிய நூல் இயற்றி ஒரு சமயத்தைக் காணும் திறனும் பெற்றார். எனவே, இத்தகைய பெருமைக்குக் காரணமாய் இருந்த தேவகபூபதியின் கல்விச்சிறப்பு இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு உபநிடதகால பெண்களின் புலமைத்தன்மை காணப்பட்டது.

**இராமாயண காலத்தில் பெண்கல்வி**

இராமாயணத்தில் பெண் பிள்ளைகளுக்கு முறையான கல்வி அளிக்கப்பட்டதா என்பது குறித்துத் தெளிவாக அறியமுடியவில்லை. எனினும், இராமாயண கதாபாத்திரங்கள் முழுவதும் அறிவில்லாதவர்கள் எனக் கூறமுடியாது கைகேயி, தாரை, சீதை, முதலியோரின் உரையாடல்கள் வாதங்கள் என்பவற்றிலிருந்து அவர்கள் பல விடயங்களைப் பற்றிய அறிவுடையவர்களாக விளங்கினர் என்பது தெரியவருகின்றது.[8]

**சங்ககாலத்தில் பெண்கல்வி**

சங்க வரலாறு என்பது தமிழர் தம் செம்மையான வரவாற்றை மையமாகக் கொண்டது. அக்காலத்தில் இல்லற மாண்பு, கொடை, வீரம் ஆகியவற்றின் திண்மை போற்றுவதற்குரியனவாக அமைந்தன. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்பன சங்க இலக்கியத்தில் இடம்பெறுவன. சங்ககால பெண்கல்வி என்ற தலைப்பில் எடுத்துக்காட்டுவதற்கு இந்நூல்களில் அமைந்த பாடல்கள் பெரிதும் துணைபோவனவாகும். முதலாவதாக ஔவையாரின் சிறப்பியல்புதனை நோக்கலாம். இவர் அதியமான் நெடுமானஞ்சியிடம் நெல்லிக்கனியை பெற்று நெடிது காலம் வாழ்ந்தவர். அதியமானை வாழ்த்திய இடத்தில்,

''பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி நீலமணி மிடற்றொருவன் போல
மன்னுலக பெரும நீயே தொன்னிலைப் பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாதாதனின்னகத் தடக்கிச்
சாதனீங் வெமக்கீத் தனையே''

எனப்புறநூனூற்றுத் தொண்ணூற்றொன்பதாம் பாடலில் இந்நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுகின்றர்.[9] ஔவையாரின் உறுதியான வாழ்வும் வாக்கும் மற்றொரு பாடலிலும் காணமுடிகிறது. அதாவது, தொண்டைமானிடம் அதியமானுக்காகத் தூது சென்ற இடத்தில் தொண்டைமானின் படைக்கலக் கொட்டிலைப் புகழ்ந்தது போலப் பழித்துப் பாடுகிறார்.
அழகான படைக்கலக் கொட்டில், பளிச்சென்று மின்னும் ஆயுதங்கள் பகை முகத்தைக் காணாமல் இங்கே வாளா கிடக்கின்றன. ஆனால், அதியனின் படைக்கொட்டிலிலோ முறிந்து

நொறுங்கிய ஆயுதங்கள் திருத்துவதற்காகக் கொல்லனது பணிக்களரியில் இடம் பெற்றுள்ளன என்று நயமாகப் பாடியுள்ளர். புறநூனூற்றுத் தொண்ணூற்றைந்தாம் பாடலில் இக்கருத்தைக் காணமுடிகின்றது. ஔவையாரின் உயர்ந்த புலமையை நோக்கிச் சேரநாட்டு மன்னன் பொன்னால் செய்த ஒரு ஆட்டை ஔவைக்கு அளித்து மனம் மகிழ்ந்தான் அதனைப் பெற்ற ஔவையாரும் ‘‘சேரா! உன்னாடு பொன்னாடு’’ என வாழ்த்திச் சென்றார்.[10] என்பது வரலாறாகும்.

சங்காலத்தில் தமிழ்ப்பெண்களிற் பலர் கல்வியறிவிற் சிறந்து விளங்கியமைக்கான சான்றுகள் பல காணப்படுகின்றன. ‘‘பெண்ணிற் பெருந்தக்கயாவுள’’ என்று இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வினாவெழுப்பிய வள்ளுவப் பெருந்தகை அன்றைய தமிழ் நாட்டுப்பெண்களின் சீரையும் சிறப்பையும் கல்விச் செழிப்பையும் கண்டுதான் அவ்வாறு கூறியிருக்கவேண்டும். சங்ககாலத்தில் பெண்கள், அரசியல், அமைச்சியல், தொழிற்துறைகள், கலை வாழ்க்கை, புலமை வாழ்க்கை, பொது வாழ்க்கை ஆகியவற்றில் இடம் பெற்றிருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. பெண்கள் கல்வி நலத்தால் மேன்மையும் பெருமையும் உடையவராக விளங்கியுள்ளனர். கல்வியால் பெருமிதம் கொண்ட தலைவன் ஒருவன் அறியாமையைப் பலர் அறியும் வண்ணம் வெளிப்படுத்திய தலைவியைத் தலைவன் வியந்து கூறுவதாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

> ‘‘………………வடிநாடிவின்
> வல்லார் முற்சொல்வல் லேனென் பிறர் முன்னர்க்
> கல்லாமை காட்டியவள் வாழி சான நீர்’’

இப்பாடலின் மூலமாக இளவயதிலிருந்தே பெண்கள் புலமை மிக்கவர்களாக விளங்கியமை தெளிவாகின்றது.[11]

சங்கால சமூக நிலையில் ஆண்கள் வதிவிடத்தை விட்டுச் சென்று கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தனர்.எனினும், பெண்கள் வெளியே சென்று கல்வி கற்றமைக்கான சான்றுகளைத் தொல்காப்பியத்தின் வாயிலாக அறியமுடியாதிருக்கின்றது. இக்காலத்தில் பெண்கள் சிறந்த பாடல்களை இயற்றும் அளவிற்கு இலக்கியப்படைப்புகளை ஆற்றும் அளவிற்கு ஆற்றல் பெற்றோராக விளங்கினர். ஔவையார், முடத்தாமக் கன்னியார், காக்கை பாடினியார், நச் செள்ளையார் போன்றோர்.[12] இதற்கு எடுக்காட்டாக விளங்குகின்றனர். இக்காலத்தில் பெண்டிரைப் பதவிகள் எதிலும் அமர்த்தியதாகத் தெரியவில்லை. ஆனால், ஔவையார் தனிப்பட்ட முறையில் தூது சென்ற குறிப்பு ஒன்று சங்க இலக்கியத்தில் வருகின்றது.

தமிழ்ச்சங்கத்தில் தமிழ் ஆராய்ந்த நாற்பத்தொன்பது புலவர்களில் வெள்ளிவீதியார் போன்ற புலவர்கள் இருந்திருக்கின்றனர். மேலும், காக்கை பாடினியார், நற் செள்ளையார், பொன்முடியார், பூத பாண்டியன் தேவியார், ஆதி மந்நியார், ஒக்கூர்மசாத்தியார், வெண்ணிக்குயத்தியார் ஆகிய பெண்பாற் புலவர்களின் பாடல்கள் சங்க நூல்களில் காணப்படுகின்றன. சங்க காலத்தில் பெண்கள் கலைகள் பல கற்றுக், கலை வாழ்க்கையிலும் ஈடுபட்டிருந்துள்ளனர். இசை, நடனம், கூத்து என்பவற்றில் சிறந்து


ISBN 978-624-5736-14-0

விளங்கினர். பானர் என்போர் யாழ் மீட்டி இசை அளிப்பதில் வல்லமை பெற்றிருந்தவர். இவர்களில் பெண்பாலாரைப் பாடினி என்பர். இவர்கள் இசைப் பாடல்களைப் பாடுவதில் திறமை பெற்றவர்கள் பொருநர் என்போர் இன்னொரு பிரிவினர் இவர்கள் மன்னர்கள், வணிகர், வேளாளர் ஆகியோரை ஏற்றிப் புகழ்ந்துபாடி அவர்களிடம் பொருள் பெற்ற வாழ்க்கையை நடத்தினர்.[13] இவர்களின் பெண்களை 'விறலியர்' என அழைப்பர். இசை, நடனம் ஆகிய கலைகளில் திறமை பெற்றவர்கள். இவ்வாறே கூத்துக்களில் ஈடுபாடுள்ள கூத்தியரும் இருந்துள்ளனர். இவர்கள் நுண்கலைக் கல்வியிற் சிறந்து விளங்கினர். பண்டைய தமிழ்நாட்டில் பெண்களின் நிலை ஒரே மாதிரியாக இருந்ததென்று கூறுவதற்குமில்லை. நிலவேறுபாடுகள், தொழில் வேறுபாடுகள், சமூக நிலைவேறுபாடுகள் இருந்தன பெண்களின் கல்விநிலையும் சமூகத்தில் பெண்களின் நிலையும் இடத்துக்கிடம் வேறுபட்டிருந்தன.

**சங்கமருவிய காலத்தில் பெண்கல்வி**

பக்தி இலக்கியங்கள் அதிகமாகப் படைக்கப்பட்ட பல்லவர் காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் தமிழில் சமயச்சார்பான இலக்கியங்கள் அதிகம் தோன்றியுள்ளன. அத்தகைய இலக்கியங்கள் வழியாகப் பெண் சமயவாதிகள் பலர் தமிழ் சமூகத்தில் இடம் பிடித்துள்ளார்கள் கவுந்தியடிகள், மணிமேகலை, கண்ணகி, குண்டலகேசி, நீலகேசி, திலகவதியார், இசைஞானியார், காரைக்கால் அம்மையார், ஆண்டாள் என்பவர்கள் முக்கியமானவர்கள்.[14] இவர்களுள் சிலர் தெய்வங்களாகியிருக்கிறார்கள். சிலர் இலக்கியம் படைத்தவர்கள். அவர்களின் இலக்கியங்களின் நோக்கு பக்தி நெறியின் வளர்ச்சியே ஆகும்.

காரைக்கால் அம்மையார் சங்கமருவிய பிற்பகுதியில் கி.பி 5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். காரைக்கால் பகுதியில் பிரபல வர்த்தகரின் மகளாகப் பிறந்து வர்த்தகருக்கே வாழ்க்கைப்பட்டவர். அக்காலத்துச் சிறந்த கல்வியைப் பெற்றிருந்தவர்கள். மொழி நிலையில் இலக்கணம், பாவியல், அணியியல், என்பனவற்றைப் பயின்றவர். மேலும், முற்கால இலக்கியங்கள், வாய்வழிக் கதைகள், பொது வசனப் பாடல்கள், வழியாகச் சமயம், சமூகம், இதிகாசம், புராணம், பண்ணிசை, வரலாறு, புவியியல் எனப்பல துறை அறிவைப் பெற்றுக் கொண்டவர்கள்.[15] தமது தந்தையாரின் பணச் செல்வாக்கால் கல்வியைத் துறை போக கற்றிருப்பார். இத்தகைய புலமைத்துவப் பிண்னணி இயங்கிய அம்மையார் அற்புதத்திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள், திருவிரட்டைமணிமாலை என்பனவாகும். அம்மையாரின் இலக்கியங்களை வடிவத்தினால் பெயர் கொள்ளப்பட்டடு திரு அடைபெற்றுள்ளன. அந்தாதி, இரட்டைமணிமாலை, பதிகம் என்பவை அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டன.

மொழிதான் சமூகத்தைக் கட்டமைக்கிறது. மொழியின் பயன்பாட்டை மாற்றுவதால் சமூகத்தை மாற்றலாம். சமூகத்தை மாற்றலாம் என்றால் அங்கே அரசியல் நடைபெறும் மொழி உலகின் சகல மாற்றங்களுக்குமான காரணமாகிறது."[16] இந்த உண்மையினை இலக்கியவாதிகள் தெரிந்துவைத்திருக்கிறார்கள். அம்மையாரும் 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாளும் தெரிந்து கொண்டனர், பயன்படுத்தினர். எடுத்துக்காட்டாக நமசிவாய, அரோகரா, நாராயண போன்ற சொற்களின் மொழிக் கூறுகளின் வலிமையைக் கூறலாம்.[17] எனவே, சமூக மாற்றத்தை எற்படுத்துவதற்கு கல்வி பெரும் துணையாக அமைந்தன. சங்கமருவிய

இலக்கியங்களில் பெண்களின் அறவியல் கருத்துக்களை கொண்டு காணப்பட்டாலும் பெண்கல்வி சார்ந்த நேரடியான சான்றுகள் காணப்படவில்லை. திருக்குறலில் கல்வி பற்றிய அதிகாரத்தில் ஆண் - பெண்ணுக்கு பொருந்தும் பொதுமை கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

**பல்லவர் காலத்தில் பெண்கல்வி.**

கல்வியைக் கரை இலா காஞ்சி மாநகர்……[18] என்று அப்பர் கல்வியைக் கரைகண்ட சான்றோர் வாழும் காஞ்சி நகர் என்று பொருள். இத்தகைய சிறப்பு வாய்ந்த காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட பல்லவப் பேரரசில் கல்வி, இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சியைக் காணமுடிகிறது. பல்லவ நாட்டில் வடமொழிக்கல்லூரிகளில் புராணங்கள், அறநூல்கள், தருக்கம், இலக்கணம், தரிசணங்கள், சித்தாந்தம், ஆயுள்வேதம், மருத்துவம், செய்யுள் நாடகம், இசை, ஓவியம் முதலிய பாடங்களில் கல்வி போதிக்கப்பட்டன. சைவ, வைண மடங்களிலும் கல்வி புகட்டப்பட்டது. பல்லவ பாண்டிய அரசுகளின் இறுதிப்பகுதியில் வைதீக சமயங்கள் ஸ்தாபிதமானதைத் தொடர்ந்து அதாவது, 8ஆம் நூற்றாண்டிலிருந்து ஆலயங்களில் இறைவனுக்கான கிரியைகளுடன் பெண்களின் கலைச்சேவையும் சமூக அங்கீகாரத்தைப் பெற்றதுடன் தேவதாசி என்ற படிமமும் உருவாக்கப்பட்டது.[19] விறலி, பாடினி ஆகிய பெண் இசைஞர், நடனமாதர் ஆகியோர் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களிலும் காணப்படுகிறது.

அரசியல், பொருளதாரம், சமயம் என்பவற்றில் இடம் பெற்ற மாற்றங்கள் சமூக வாழ்க்கையிலும் ஏற்படலாயின. பால்நிலை வேறுபாடு கருதாது, மக்கள் இயக்கமாகப் பரவிய பக்தி மார்க்கத்தில் பெண்களும் தம்மை இணைத்துக் கொண்டனர் வர்ணாச்சிரமப் பாகுபாட்டில் அடங்கும் சாதிகளிலுமிருந்தும் நாயன்மார்களும், ஆழ்வார்களும் உருவாயினர் காடர்கோனிலிருந்து கண்ணப்பர் வரை, திருஞானசம்பந்தரிலிருந்து திருநாளைப்போவார் வரை இதிலடங்குவர். அதேபோல மரபறியா அடியாரான ஆண்டாள், அரசகுலப் பெண்ணான மங்கையர்க்கரசியாரிலிருந்து வைசியப் பெண்ணான புனிதவதியார் வரை பக்தி இயக்கம் ஊடுருவிப் பரந்தது.[20] பக்தி இயக்கத்தில் பெண்களின் பங்களிப்பு மிகக் காரணமாக அமைந்தது கல்வி எனலாம்.

கி.பி 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாள் வளர்ப்பால் வைஷ்ணவர் அதிலும் பிராமணர். கோதை, நாச்சியார், திருமகள் எனத் தம்மை அழைத்தவர், பிறராலும் அழைக்கப்பட்டவர். தமது தந்தையாரிடமும் தந்தையார் மூலம் பிறரிடமிருந்தும் பலவற்றைக் ஆழந்த புலமைத்துவ சமூகத்தில் வாழ்ந்த ஆண்டாள் நாச்சியார் திருமொழி, திருப்பாவை, நூல்களை படைத்தார். நாச்சியார் படைத்த கவிதைகளைத் தொகுத்தவர்கள். அவர் கவிதைகளில் கையாண்ட மொழி, மொழியை கையாண்ட பாங்கு என்பவற்றின் திறனைக் கொண்டு அத் தொகுப்பிற்கு “நாச்சியார் திருமொழி” என்ற பெயர் வைத்து வழங்குமளவிற்கு அவரது படைப்பாற்றலே காரணம் எனக் கூறவேண்டும்.[21] பல்லவர் காலத்து பெண்கள் பற்றிய குறிப்புகள் பெருமளவு அறியப்படாததாகவே இருக்கிறது. தந்தைவழி சமூக அமைப்பில் ஆண்களே முதன்மை பெறுவதனால் பெண்கள் பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவமும் கொடுக்காததே இதற்குக் காரணமெனலாம். பல்லவர் கால பட்டத்தரசிகள் ஆற்றிய பணிகளை பிற்கால ஆய்வாளர்கள் கல்வெட்டுகளிலிருந்து விபரங்களை தொகுத்துள்ளனர்.

எனவே, பல்லவர்காலத்து பெண்கள் கல்வி, கலை, கோயில் வழிபாடுகளில் சிறப்புப் பெற்றதனை அறியமுடிகிறது.

**சோழர் காலத்தில் பெண்கல்வி**

தமிழகக் கல்வெட்டுக்களில் பெண்கள் என்ற நூலில் ஆசிரியரான லெஸ்லி சி. ஆர். தமது நூலில் கல்வெட்டுக்களுடாகச் சோழர்காலப் பெண்களை எட்டு வகையினராக இணங்கண்டுள்ளர்.[22] அரசிகள், தேவிகள், (சிற்றரசிகள்), பிராமணப்பெண்கள், கோயிற்பெண்கள், அடிமைகள், சமணச்சமயப்பெண்கள், சமயபோதிகள், அடிமைகள், பிறபெண்கள் என்போரை குறிப்பிடலாம். சோழர்கால இலக்கியமாகிய திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருமான் கல்வியைக் கற்றுக் கொள்ளவேண்டும் அது பெரிய கடல் போன்றது. அதனை நுகர நுகர பேரும் புகழும் கிடைக்கும் என்று வலியுறுத்துகிறார்.

‘‘கல்வி யென்றும் பல்கடல் பிழைத்தும்’’[23] என்றும்

‘‘ கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை’’[24] என்று

கல்லாதவன் இவ்வுலகில் மிகவும் கீழான உயிரைவிட மோசமானவன் என்கிறார். எனவே, கல்வி என்பது முக்கியமாகக் கருதப்பட்டது. ஒரு நாட்டின் கற்றவர்கள் அதிகம் இருந்தால் அந்நாடு வறுமையிலிருந்து மீண்டுவிடும், அறிவு, ஞானம் பெற்று விடும் என்பதை,

‘‘கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி’’[25] என்று திருவிசைப்பா கூறுகின்றது.

சோழர்காலப் பெண்புலவராக பரவலாக அறியப்பட்டவர் ஔவையார் மட்டும் என்றே கூறத்தோன்றுகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றில் காணப்படுகின்ற ஆறு ஔவையார்களுள் இக்கால ஔவையார் தனிப்பாடல்கள் பாடியவராக இனங்காணப்பட்டுள்ளார். ஔவைக்குறள், விநாயகரகவல் என்பனவும் இவர் இயற்றியனவேயென்பர். இவற்றினூடாக கவியாற்றலில் சிறந்து விளங்குபவராகவும் உலகஞானம் மிகுந்தவராகவும் இவரைக் கண்டு கொள்ள முடிகின்றது. இவருக்கும் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி ஆகியோருக்குமிடையிலான பரஸ்பர சந்திப்புகள் இடம் பெற்றதாகவும் இவ்வேளையில் அவர்களுக்கு நிகராக தமது ஞானச் செருக்கினை ஔவையார் வெளிப்படுத்தியதாகவுமான செவிவழிக்கதைகள் பலவுள்ளன.[26]

ஔவையார் பாடியதாகக் கூறப்படும் தனிப்பாடல்கள் பலவும் கூட ஔவையாரால் பாடப்பட்டனவென்றோ சோழர் காலத்திற்குரியனவென்றோ கூறமுடியாதவை. ஒரு சில பாடல்கள் காலமுரண் கொண்டவையாகவுமுள்ளன (உ-ம் அதியமான், ஔவையார் தொடர்பு பற்றியவை) வேறு சில பாடல்கள் சோழர்காலத்திற்குரியவாயினும் கால நீட்சி கொண்டவை. இவ்வாறான நிலையில் இவற்றைப் பலர் பாடியிருத்தலும் சாலும். ‘‘ஔவையார்’’ என்ற சொல் உறவுசார் பொருளிலும் வழங்கிவருவதால் அத்தகைய நிலையினர் பலரைக் குறிக்கின்ற பொதுப் பெயராகவும் ஔவையார்கள் இருந்திருக்கலாம். ஔவையார் தவிர கம்பர் வீட்டுப்பணிப் பெண் ஒருத்தி, ஏகம்பவாணர் என்ற நிலக்கிழாரின் மனைவி முதலான சிலரும் பாடியதாகக் கூறப்படும் சில தனிப்பாடல்களுள்ளன.[27] எது எவ்வாறிப்பினும் பாடலியற்றும் ஆற்றல் கொண்ட பெண்புலவர்கள் சிலராவது சோழர்காலத்திலிருப்பார் என்று கூறுவதில்

தவறில்லை. சோழர்காலத்தில் தேவரடியார் மிகவும் சிறப்பு பெற்றது. இறைவனுக்குத் தொண்டு புரிபவர் என்பதையே இப்பதம் சுட்டுகின்றது. திருக்கோயில்களில் அலகிடல், மெழுகுதல், திருவமுதுக்கான அரிசியை தூய்மை செய்தல், மலர் தொடுத்தல் முதலிய திருப்பணிகளைச் செய்தவர்கள் தேவரடியார்கள் எனப்பட்டனர். இவர்களுள் சிலர் தேவாரம், திருவாசகம் ஓதுவாராகவும் இசை வல்லுநர்களாகவும் நடனம், கூத்து போன்ற கலைகளிலும் சிறந்த பயிற்சியுடையவராகவும் இருந்தனர்.[28] இவர்கள் பெரும்பாலும் பெண்களாகவேயிருந்தனர். இவர்கள் திருப்பணியாள், சேவையாள் என்னும் இருவகையில் கோயிலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

**விஜயநாயக்கர் காலத்தில் பெண்கல்வி**

விஜயநகர பேரரசு காலத்தில் ஒரு சில சமூக மக்களுக்கு மட்டும் கல்வி அளிக்கப்பட்டது. இம்முறை பின்பற்றப்பட்டது. கோவில் வளாகங்களிலும், ஆசிரியர்கள் வீடுகளிலும் வகுப்புகள் நடத்தப்பட்டன. கல்வி நிலையங்கள், அரசர்கள், பிரபுக்கள் ஆகியோரின் ஆதரைவப் பெற்றிருந்தன. வேதங்கள், ஜோதிடம், மருத்துவம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை பல்கிப்பெருகிய பக்தி, காப்பிய இலக்கியங்களின் தொடர்ச்சியாக பதின் மூன்றாம் நூற்றாண்டில் நீதி இலக்கியங்களின் பிற்கால வளர்ச்சி தொடக்கம் விஜயநகரநாயக்கர் கால இலக்கியத் தோற்றத்திற்கு வித்திட்டவர் ஔவையார்.[29] ஔவையார் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை என்னும் நூல்களைப் படைத்தளித்தார்.

நாயக்கர் தங்கள் ஆட்சி காலத்தில் கல்வி வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கவில்லை எனவே, தனியார்களும், சாதி அமைப்புக்களும், தொழிற்குழுக்களும் தங்களின் தேவைக்கேற்ற கல்வியை மாணவர்களுக்குப் பயிற்றுவித்துவந்தன. பெண்கள் கல்வியை கற்றனர் என்பதற்கு சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை. குமரகுருபரர் கல்வியை கற்புடைய பெண்ணாகவும் இப் பெண்ணின் புதல்வனாகக் கவிதையையும் மொழிச் சிறப்பே செல்வம் என்றும் தெளிப்படுத்துகிறார். இதனை,

> ‘‘கல்வியே கற்புடையப்பெண்டிரப் பெண்டிர்க்குச்
> செல்வ புதல்வனே தீங்கவியாச் சொல்வளம்
> மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
> செல்வமுமுண்டு சிலர்க்கு’’[30]

**நவீன சீர்திருத்தவாதிகளின் பெண்கல்வி பற்றிய சிந்தனை**

இருபதாம் நூற்றாண்டில் இந்து சமுதாயத்தில் பெண்களின் கல்வி நிலை உயர்த்தவும் பெண்ணுரிமைகளை மீட்கவும் இயக்கங்கள் பல நடாத்தப்பட்டு வந்தன. இதில் முன்னின்று உழைத்தோரில் ராஜாராம்மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ணபரமகம்சர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், மகாத்மாகாந்தி, ஜவகர்லால் நேரு, அன்னி பெசன்ற் அம்மையார், சரோஜினி நாயுடு, சகோதரி நிவேதிகா ஆகியோர் பாரதத்திற் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் யாபேரும் கல்வியின் மூலமே பெண்களின் நிலையை உயர்ந்த முடியும் என்ற கருத்துக்களைக் கொண்டவர்களாக இருந்தனர்.[31] வேதகாலத்தில்

பெண்களின் உயர்நிலைக்குக் கல்வியே காரணமாக இருந்தது. அதன் பின்னர் பெண்களின் அடிமைநிலைக்கு கல்வி மறுக்கப்பட்டமையே காரணமாக இருந்தது.

இந்தியாவில் பெண்கல்வி ஆதிகாலம் தொட்டே கவனம் பெற்றது என்று கூறினாலும் நவீன காலத்தில் அது நலிவுற்றது. எனினும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெண்கல்வி இந்தியாவில் நடைமுறையில் இருந்து வந்தது என்று சான்றுகள் பகரும் அளவுக்கு மட்டுமே காணப்பட்டது. அக்காலத்தில் பிரபுக்களும் ஜமீன்தார்களும் தங்கள் குடும்பத்தில் பெண்களுக்குக் கல்வி கற்றுக்கொடுத்தனர். ஆனால், அதன் வளர்ச்சிக்காக அல்லாமல் தாங்கள் புகுந்த வீட்டில் உள்ள சொத்துக்கள், வருமானம் ஆகியவற்றைக் கண்காணிக்கவும் தங்கள் கணவன்மார்கள் இறந்து இவர்கள் விதவையாக நேரிட்டால் அவர்களை வேறுயாரும் ஏமாற்றி விடக் கூடாது என்பதற்காகவுமே ஆகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசு ஈது பற்றிச் செயல்படத் தொடங்குவதற்கு முன்னதாகவே ராஜாராம்மோகன்ராய் பெண்கல்விக்கு ஊக்கம் கொடுத்தார்.[32] பெண்கல்வி தொடர்பான கட்டுரைகளைத் தத்துவ போதினி எனும் நூலில் ராஜாராம்மோகன்ராய் வெளியிட்டார் இவ்வகையில் பெண்கல்வியை மறுத்து அவர்களைத் தாழ்வு படுத்தினால் நாடு அடிமைப்பட்டது என்பதைத் தத்துவபோதினி எடுத்துக்காட்டியதாகக் கூறப்படுகிறது.[33]

நவீன காலத்தில் இந்தியாவில் சமூக, சமய, அரசியல் நடவடிக்கைகளில் பங்காற்றிய பெண்மணியாகச் சரோஜினி நாயுடு திகழ்ந்தவர். இவர் கவித்துவம் நிறைந்தவர். சிறந்த மேடைப்பேச்சாளர் இந்து சமூகத்தில் விதவைகளின் முன்னேற்றத்திற்காகவும் பெண்களின் கல்விக்காகவும் பெருந்தொண்டாற்றினார். இந்திய சமூக, சமய, அரசியல் பணிகளில் தலைமைப் பொறுப்பேற்று நடத்தினார். பெண்களின் உரிமைக்காகவும் பேராடினர். இவ்வகையில் 1925 ஆம் ஆண்டு இந்திய தேசியக் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுகந்திரப் போராட்டத்தில் பெண்கள் ஆண்களுடன் சரிநிகர் சமானமாகப் பேரிட்டுச் சுகந்திரம் பெறவேண்டும்.[34] பெண்கள் என்ற போர்வைக்குப் மறைந்து கொண்டு சலுகைகள் பெறக்கூடாது என்ற கொள்கையை உடையவர். பெண்கள் தனித்துவத்துடன் சுகந்திரமாக வாழவேண்டும் அவர்கள் வாழ்வில் பொருளாதார சுதந்திரம் வேண்டும் என்ற கொள்கையை உடையவர்.

19ஆம் நூற்றாண்டில் ஏற்படத்தொடங்கிய இந்து மத மறுமலர்ச்சி ஒரு மாபெரும் மகானையும் அவரது உன்னத சீடரையும் உலகுக்கு அளித்தது. உலகத் துறவிகளுள் தனித்துவம் வாய்ந்தவராக சுவாமி விவேகானந்தர் விளங்கினார்.[36] கல்வியறிவிலும் உலக ஞானத்திலும் மெய்யுணர்விலும் சிறந்து விளங்கிய இவர் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் கருத்துக்களை வழங்கினார். இவ்வகையில் பெண்கள் தொடர்பான கருத்து நிலைப்பாட்டினை எவ்வித ஒழிவு மறைவுமின்றி புலப்படுத்தியுள்ளார். பெண்களின் கல்வியும் பண்பாடும் ஆடவனைப் பொறுத்தது எங்கே ஆண்கள் நல்ல பண்பாட்டுடன் விளங்குகிறார்களோ அங்கே பெண்களும் பண்பாட்டுடன் விளங்குவார்கள். எங்கே ஆண்கள் அப்படி இல்லையோ பெண்களும் அப்படி இருக்கமாட்டார்கள். பெண்களின் வளர்ச்சி குறித்து அதிக அக்கறை செலுத்திய சுவாமி விவேகானந்தர் அவர்கள் வளர்ச்சியடைவதற்கு வேண்டிய முதல்நிலை சுகந்திரமே எனத் தெரிவித்துள்ளார்.[37] இவ்வகையில் மேனாட்டுப் பெண்களின் சுகந்திரத்தை

மிகவும் போற்றுகிறார். இந்திய நாட்டுப் பெண்களுக்கு அத்தகைய சுகந்திரம் இல்லையே என்ற வேதனை அவர் உள்ளத்தில் இருந்தது.

பெண்கள் கல்வியிலும் ஆத்மஞானத்திலும் பயிற்சி பெறுவதற்காகத் தனியான மடம் ஒன்றையும் நிறுவதற்கு விவேகானந்தர் விரும்பியிருந்தார். ஒவ்வொரு கிராமங்களிலும் பெண்கள் முன்னேற்றம் கருதிப் பாடசாலைகள் திறக்கப்பட வேண்டும் என்ற ஆர்வத்தைச் சுவாமி கொண்டிருந்தார்.[38] பெண்கள் உயர்த்தப்பட்டால் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் மகத்தானவர்களாக வளர்வர். பெண்கள் கல்வியறிவுடையவராய் இருப்பின் அவர்கள் கருவில் உதிக்கும் மக்களும் கல்வியறிவு பெற்று விளங்குவர்.

**இலங்கையில் பெண்கல்வி**

இந்துப்பெண்கள் பற்றிய விழிப்புணர்வுகள் இருபதாம் நூற்றாண்டில் ஏற்படுவதற்கும் சமூக நிலையில் மேம்பாடு அடைவதற்கும் வாய்ப்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டு நவீன சீர்திருத்தங்களின் செயற்பாடுகளே அடித்தளமிட்டன என்பது உண்மையாகும். இவ்வாறு இருபதாம் நூற்றாண்டுக் காலத்து வளர்ச்சி நிலைகளை நாம் பார்க்கின்ற போதுதான் பத்தொன்பதாம் நூற்றாண்டு நவீன சீர்திருத்தங்களது செயற்பாடுகளுடைய பலாபலன்களைத் திடமாக மதிப்பீடு செய்து கொள்ளமுடியும் என்பது தெளிவாகின்றது. குறிப்பாகப் பெண்ணியம் என்ற உலகளாவிய நிலை சார்ந்த ஒரு கண்ணோட்டமும் பெண்களுடைய நலனுக்காக சமூக நிறுவனங்கள் எழுச்சி பெறுவதற்கும் இதன் வழி வாய்ப்பு ஏற்பட்டமைக்கும் பெண்கள் மீது அக்கறை கொண்ட படித்த வர்க்கத்தினரது செயற்பாடுகளே காரணமாக அமைந்தன. இத்தகைய ஒரு பிண்ணி தான் யாழ்ப்பாணத்து இந்துப் பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு பெண்கள் பலர் முன்னின்று உழைத்தனர் என்பதும் இவர்களது வரிசையிலே சீமாட்டி லீலாவதி இராமநாதன், மங்களம்பாள், இரத்தினா மா நவரத்தினம், பத்மாசனி இராஜேந்திரம், தம்பு வேதநாயகி, தங்கம்மா அப்பாக்குட்டி, மங்கையற்கரசி திருசிற்றம்பலம், வசந்தா வைத்தியநாதன், பத்மா சோமகாந்தன் போன்றவர்களின் பணிகள் ஏனைய பெண்களின் கல்வி வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன என்பது ஐயமில்லை.

இந்து சமுதாய வரலாற்றில் பெண்கல்வியை தொகுத்து நோக்கும் போது வேதகாலத்தில் பெண்களுக்கு இருந்த புலமைச் சுதந்திரம் ஏனைய காலங்களில் காணப்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நவீன சீர்திருத்தவாதிகளின் வருகையினால் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் கண்டிக்கப்பட்டு, பெண்கள் கல்வியில் பங்கு கொள்ளுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பட்டது. தற்போது பெண்கள் கல்வியில அதிகளவு அக்கறை காட்டுகின்றனர். இவர்கள் ஆண்களை விட கல்வியில் வளர்ச்சி கண்டுள்ளனர். இந்துப் பெண்கள் உச்சளவில் கல்வியின் மூலம் நன்மைகள் பெற்றுக்கொண்டனர். பெண்கள் தொடர்பான ஆய்வுகள் பல்வேறு துறைகள் ஊடாக பல கோணங்ககளில் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். யாழ்பாணத்து பண்டைய பெண்கள் இந்து சமுதாயத்தில் பல்வேறுபட்ட விதங்களில் விதிக்கப்பட்ட கட்டுக்கோப்புகளுக்கு உட்பட்ட வகையில் வாழ்ந்து சிறப்பித்தனர் என்பதை எமது இன்றைய மற்றும் அடுத்த தலைமுறையினருக்கும் எடுத்துக்காட்டுவதற்கு இத்தைய ஆய்வுத்தேடல்களும் அவற்றின் வெளிப்பாடுகளும் ஆகும்.

**அடிக்குறிப்புகள்**

1. கல்யாணசுந்தரனார், வி., (2011), **பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை**, ப - 3.
2. சோமசுந்தரம், கு., (1984), இந்து மரபுக் கல்விச் சிந்தனைகள் சமகாலத் தமிழர் சமுதாயத்துக்குப் பொருந்தும் நயம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக முதுமாணி கல்வி தகைமைக்காச் சமர்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை, ப.28.
3. மேலது.ப. 282.
4. மேலது.ப. 282.
5. மேலது.ப. 283.
6. விக்னேஸ்வரி, ப., (2002), இந்துப்பண்பாடு மரபில் பெண்களின் நிலை சிறப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு நவீன இந்து சீர்திருத்த இயக்ககாலத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு, யாழ்ப்பாணப்பல்கலைகழகத்திற்கு முதுதத்துவமாணிப் பட்டத்திற்கான ஆய்வேடு, ப.53.
7. மேலது.ப. 36.
8. மேலது.ப. 43.
9. சிவத்தமிழ்ச் செல்வி வாசகம், ப.47.
10. மேலது.ப. 48.
11. விக்னேஸ்வரி, ப., (2002), (மு.கு.நூ), ப.53.
12. மேலது.ப. 54.
13. சோமசுந்தரம், கு., (1984), (மு. கு. நூ), ப.288.
14. ரூபவதனன், ம., (2008), காரைக்காலம்மையாரும் ஆண்டாளும் ஓர் ஒப்பியல் நோக்கு, **பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும்**, ப.424.
15. மேலது.ப. 425.
16. மேலது.ப. 434.
17. மேலது.ப. 434.
18. அப்பர் தேவாரம், பா.எ: 4:43:431.
19. நாச்சியார், செ., (2008), பல்லவர்காலத்துப் பெண்கள், **பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும்**, ப.53.
20. மேலது.ப. 60.
21. ரூபவதனன், ம., (2008), காரைக்காலம்மையாரும் ஆண்டாளும் ஓர் ஒப்பியல் நோக்கு, (மு.கு.நூ), ப.426.
22. லெஸ்லி, சி., (2003), **ஓர் தமிழகக் கல்வெட்டுக்களில் பெண்கள்**, ப.18.
23. திருவாசகம், பா.எ: 8.4.1.
24. மேலது. பா.எ: 8.8.5.
25. திருவிசைப்பா, பா.எ: 9.5.2
26. யோகராசா, செ., (2009), சோழர் காலப் பெண்கள், **சோழப் பேரரசும் சமயப் பெருநெறிகளும்,**ப.109.
27. மேலது.ப. 109.


ISBN 978-624-5736-14-0

28. மகேஸ்வரன், வ., (2008), **சோழர் காலத்துக் கோயிலும் சமூகமும்**, ப.104.
29. விக்னேஸ்வரி, ப., (2014), விஜய நாயக்கர் காலத்தமிழ் இலக்கியங்கள் புலப்படுத்தும் இந்து அறவியற்சிந்தனைகள் ஒரு நுண்ணாய்வு கலாநிதிப்பட்டத்திற்காகப் பட்டப்படிப்புகள் பீடத்தினூடாக யாழ்ப்பாணப்பல்கலைக்கழத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு, ப.08.
30. நீதிநெறி விளக்கம், பா.எ: 3.
31. சோமசுந்தரம், கு., (1984), (மு. கு. நூ), ப.287.

1. விக்னேஸ்வரி, ப., (2002), (மு.கு.நூ), ப.162.
2. மேலது.ப. 163.
3. மேலது.ப. 223.
4. மேலது.ப. 223.
5. பத்மநாதன்,சி.,இரகுபரன்,க.,பிரசாந்தன்,ஸ்ரீ.,(ப.ஆ), (2010), **பிரித்தானியர் ஆட்சியும் நவீனமயமாக்கமும்** விக்னேஸ்வரி,ப.,(க.ஆ), இந்து மதத்தின் நவீனமயமாக்கத்தில் சுவாமி விவேகானந்தர், ப.659.
6. விக்னேஸ்வரி, ப., (2002), (மு.கு.நூ), ப.187.
7. பத்மநாதன்,சி.,இரகுபரன்,க.,பிரசாந்தன்,ஸ்ரீ.,(ப.ஆ), (2010), (மு.கு.நூ), ப.661.

**உசாத்துணைகள்**


- சசிகலா, கு., (2012), யாழ்ப்பாணத்தின் பெண் கல்வி தோற்றமும் வளர்ச்சியும் ,சேமமேடு பதிப்பகம், கொழும்பு.
- விக்கேனஸ்வரி, ப., (2010), யாழ்பாண இந்து சமூகத்தில் பெண்கல்வியும் பண்பாடும், யாழ்ப்பாணவாழ்வியல், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.
- திருமுருகன், ஆறு., (2011),சைவ சமயத்தின் வளர்ச்சியில் மங்கையரின் பங்களிப்பு, செஞ்சொற் செல்வம், பொன்விழா சிறப்புமலர், அகில இலங்கை இந்துமாமன்றம்.
- சிவலிங்கராஜா, எஸ்., (1984), வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும், வடமராட்சிக்கல்வி வட்டம்.
- கலைவாணி,இ., (2009), இந்துக்கல்வி மரபில் சமுதாய மேம்பாடு, இணுவில் பாராஜசேகரப் பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேகச் சிறப்பு மலர், பாராஜசேகரப் பிள்ளையார் கோவில்.
- வள்ளிநாயகி, இ., (2006), யாழ்ப்பாண சமூகத்தில் பெண் கல்வி ஓர் ஆய்வு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.